2017 ஜுன் 22]

நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசு அங்கு ஒரு வேளாண்மை பல்கலைக்கழகத்தையோ அல்லது அரசு அறிவித்த நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை நிலையத்தையோ உருவாக்கித் தர முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் அந்தியேந்தலிலும், செங்கம் தொகுதியில் வாழவச்சனூர் தண்டராம்பட்டு பகுதியிலும் மாநில அரசின் சார்பில் விதைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அங்கிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையான அளவுக்கு விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதில் ஏதாவது குறைகள் தற்போது இருந்தால், அதை நீங்கள் எங்களுக்குத் தெரிவித்தால், அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

ஆவின் பாலகம்

***4015—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், மிடாலம் ஊராட்சி, உதய மார்த்தாண்டத்தில் உள்ள ஆவின் பாலகத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள் கேட்டிருக்கின்ற வினாவிற்கு எனது பதிலை அளிக்கின்றேன்.*

கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், மிடாலம் ஊராட்சி, உதய மார்த்தாண்டம் பகுதியிலிருந்து ஆர்வமுடைய மகளிர் சுய உதவிக் குழுக்களை பரிசீலனை செய்து பாலகத்தை மீண்டும் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் தொகுதி, விளவங்கோடு வட்டம், மிடாலம் ஊராட்சி, உதய மார்த்தாண்டம் பகுதியில் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த ஆவின் பாலகத்தை, சுமார் 3 ஆண்டுகளாக எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் மூடிவிட்டார்கள். இந்தப் பகுதியில் பேருந்து நிறுத்தம் இருக்கின்றது. அனைத்து சமுதாய மக்களும் மிகுதியாக வாழக்கூடிய இடம். பால் விற்பனை அதிகமாக நடக்கக்கூடிய இடம். ஆகவே, நுகர்வோர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, தரமான பாலும், பால் பொருட்களும் நியாயமான விலையில் கிடைத்திட, மீண்டும் இந்தப் பாலகத்தைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், கருங்கல், புதுக்கடை, நித்திரவிளை, கொல்லங்கோடு, ஊரம்பு, நடக்காவு போன்ற முக்கியமான பகுதிகளில் நுகர்வோர்கள் பயனடைவதற்கு புதியதாக ஆவின் பாலகக் கிளைகளைத் திறக்க இந்த அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்*

2017 ஜூன் 22]

திரு. செ. ராஜேஷ்குமார் அவர்கள், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஆவின் பாலகம் மூடப்பட்டதாகச் சொன்னார், அது தவறு. அவர் சார்ந்த கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, விளவங்கோடு வட்டம், மிடாலம் ஊராட்சி, உதய மார்த்தாண்டம் சந்தை வளாகத்தில் 5–5–2008 அன்று துவக்கப்பட்ட பாலகம், 2009 ஜனவரி மாதம் மூடப்பட்டது. மீண்டும் சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 5–8–2010 அன்று சுய உதவிக் குழுவினர்மூலம் துவக்கப்பட்ட பாலகம், மீண்டும் 19–9–2010 அன்று மூடப்பட்டது. தற்போது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கன்னியாகுமரி மாவட்ட ஒன்றியத்தின்மூலம் 7 பாலகங்களும், முகவர்கள்மூலம் 19 பாலகங்களும், சில்லறை விற்பனையாளர்கள்மூலம் 111 பாலகங்களும் ஆக மொத்தம் 137 பாலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் நாளொன்றுக்கு 15,400 லிட்டர் பால் விற்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரின் வினாவில் குறிப்பிட்டுள்ள கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது 8 சில்லறை விற்பனையாளர்கள்மூலம் நாளொன்றுக்கு 200 லிட்டர் பால் விற்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள உதய மார்த்தாண்டம் சந்தையில் இருந்த மூடப்பட்ட பாலகத்தைப் புதுப்பித்து, ஆர்வமுடைய மகளிர் சுய உதவிக் குழுவினர்மூலம் செயல்படுத்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒருவேளை சுய உதவிக் குழுவினர் முன்வராதபட்சத்தில், ஆவின் நிருவாகமே அந்தப் பாலகத்தை நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களுடைய ஆலோசனையினைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர் பல்வேறு இடங்களில் பாலகங்கள் அமைக்க வேண்டும் என்பதைச் சொன்னார். அவர் எந்தெந்த இடங்களுக்கு பாலகங்கள் வேண்டும் என்பதனை, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆவின் பொது மேலாளரிடத்தில் தெரிவித்தால், அந்த இடங்களிலும் பாலகங்கள் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருங்கல் பகுதியில் ஏற்கெனவே பாலகம் அமைந்துள்ளது. ஆனால், அங்கு பால்கோவா, badam milk powder, ஆவின் நெய், தயிர், butter milk, குலாப் ஜாமுன், milk shake, ice cream என அனைத்து வகைகளையும் விற்றால், அவற்றை வாங்கி, மக்கள் பயனடைவார்கள். ஆகவே, நான் சொல்கின்ற இடங்களில் ஆவின் பாலகம் அமைத்தால், மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அவற்றை அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா எனத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

(முற்பகல் 11–25)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கும் சேர்த்து பதில் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில், திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் நாளொன்றுக்கு சுமார் 2,500 புற நோயாளிகளும், சுமார் 300 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்கள் மட்டுமின்றி, அந்த மருத்துவமனைக்கு நாள் ஒன்றுக்கு நோயாளிகளின் உறவினர்களும், பொது மக்களுமாக சுமார் 5,000 பேர் வந்து செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தனியார், பாலில் கலப்படம் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, மக்கள் தனியார் விற்கும் பாலை அருந்துவதற்கு அச்சப்படுவதால், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் ஆவின் பாலகம் நிறுவ அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார்

2017 ஜூன் 22]

பாலில் கலப்படம் இருக்கிறது என மாண்புமிகு அமைச்சர் சொன்னதாகச் சொன்னார். எனக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சொன்னேன். (குறுக்கீடு) இதை, நான் விளையாட்டிற்காகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், இருங்கள். நீங்கள் நேரடியாகப் பதில் சொல்லாதீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன். உட்காருங்கள் நீங்கள். நீங்கள் தயவுசெய்து இப்பொழுது உட்காருகிறீர்களா, இல்லையா? மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவலின் அடிப்படையில். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வந்த தகவலைச் சொல்கிறார், அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவலின் அடிப்படையில், எங்களுடைய மாதவரம் பகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற ஆவின் பாலகங்களில் தனியார் பால் உற்பத்தியாளர்கள் தினசரி விற்பனை செய்யும் பால் பாக்கெட்டுகளைச் சோதனையிட்டதில், இரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதாக எனக்குத் தெரிய வந்தது. அதற்குச் சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுத்தால், தனியார் பால் விற்பனை செய்யும் முதலாளிகள் தங்களிடம் வேலை பார்ப்பவர்களை வைத்து, நீதிமன்றத்தில் தண்டத் தொகையைக் கட்டிவிடுகிறார்கள். அவர்களுக்குச் சரியான தண்டனை கிடைக்காமல் தப்பித்துவிடுகிறார்கள். ஆகவே, மக்களிடத்தில் விழிப்புணர்வினை உண்டாக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான், இதை நான் மீடியாக்கள் வாயிலாகச் சொன்னேனேயொழிய, எந்தத் தனியார் நிறுவனத்தையும் பழி வாங்க வேண்டும் என்றோ, எந்த உரிமையாளர்களையும் மிரட்ட வேண்டும் என்ற எண்ணத்திலோ சொல்லவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் தற்போது ஆவின் பாலகம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தமட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற 200 கல்லூரிகளில் பாலகம் அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 150 கல்லூரிகளில் பாலகம் அமைப்பதற்குத் தேவையான இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் 50 கல்லூரிகளில் பாலகம் அமைப்பதற்குத் தேவையான இடங்கள் குறித்த விவரங்கள் கோரப்பட்டுள்ளன. விவரங்கள் வந்தவுடனே நடவடிக்கை மேற்கொள்வோம். எனவே, பாலகங்களை கல்லூரிகளிலும் ஏற்படுத்தப் போகிறோம், அரசு மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தப் போகிறோம், நெடுஞ்சாலைகளிலும் வைக்கப் போகிறோம். பால் வளத் துறையை சிறந்த துறையாக மாற்ற வேண்டுமென்று மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரும்பினார்கள். அதை நடைமுறைப்படுத்தக்கூடிய விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலில் கலப்படம் செய்வதைப் பொறுத்தவரையில், சில நாட்களாக பரவலாக ஊடகங்களில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, அந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களே, பத்திரிகையில் பேட்டி கொடுத்தபோது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 'கலப்படம் செய்யப்படுவது உண்மை, அதை விசாரிக்க நான் நடவடிக்கை எடுக்கப்போகிறேன்' என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், 'அதை நிச்சயம் நிரூபிப்பேன், அதை நிரூபித்து, உரிய நடவடிக்கை எடுப்பேன். இல்லையென்றால், அது தற்கொலை செய்துகொள்வதற்குச் சமம்' என்ற அளவில்கூட அவர்கள் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். எனவே, நீதிமன்றத்திற்குச் சென்று அவர்கள் தடை உத்தரவு பெறுகின்ற காரணத்தால், கலப்படம்

2017 ஜூன் 22]

செய்யக்கூடியவர்களுக்கு அது வசதியாக அமைந்துவிடுகிறது என்ற கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெறுகின்ற காரணத்தால், பாலில் கலப்படம் செய்வது தொடர்ந்து கொண்டே இருக்குமா? அதைத் தடுக்கும் முயற்சியில் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் தற்போது இரண்டு பொது நல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றில், பால் கலப்படம் தொடர்பாக 5–6–2017 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்த தற்போதைய நிலையினை அறிக்கையாக இரண்டு வார காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. நீதிமன்றம் அறிவித்துள்ளவாறு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை ஆகிய துறைகளின் அரசுச் செயலாளர்கள் பதில் மனுவினையும், தற்போதைய நிலை குறித்த அறிக்கையினையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில், மேற்படி வழக்கானது தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், இவ்வழக்கு குறித்த முழு விவரத்தையும் தெரிவிக்க இயலாத நிலை உள்ளது. இருப்பினும், சில ஊடகங்கள், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட அனைத்து பால் மாதிரிகளும் கலப்படமின்றி, பாதுகாப்பான தன்மை கொண்டவை என மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அரசுச் செயலாளர் அவர்களால் நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இதனால், இப்பொருள் தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சில விவரங்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.*

முற்பகல் 11–30

உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தின்கீழ், 5–8–2011 முதல் 31–5–2017 முடிய 32 மாவட்டங்களில், 886 பால் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. அவற்றில்

பாதுகாப்பற்ற தன்மை கொண்ட பால் மாதிரிகள் ஏதுமில்லை என்றபோதிலும், 187 பால் மாதிரிகள் தரம் குறைந்தவையாகவும், தப்புக் குறியீடு இடப்பட்டவையாகவும் இருந்தன. இக்குறைபாடு தொடர்பாக 143 வழக்குகள் பதியப்பட்டு, அவற்றில் 81 வழக்குகளில் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டு, தண்டத் தொகையாக ரூ.10,26,300/— வசூலிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, 338 பால் பொருட்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதித்ததில், 11 பால் பொருட்களின் மாதிரிகள் பாதுகாப்பு இல்லாதவை என்றும், 132 மாதிரிகள் தரம் குறைந்தவை என்றும், தப்புக் குறியீடு இடப்பட்டவை என்றும் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளன. இது தொடர்பாக 83 இனங்கள்மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டதில், 56 வழக்குகள் தண்டனைக்குரியவை என நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டு, தண்டத் தொகையாக ரூ.6,00,500/— வசூலிக்கப்பட்டுள்ளது.

பால் கலப்பட பரிசோதனைக்காக, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர அதிகார அமைப்பானது தமிழகத்திற்கு ஒரு மின்னணு பால் பரிசோதனைக் கருவியினை வழங்கியுள்ளது. அக்கருவியின்மூலம் சென்னையில் 4–1–2017 அன்று 20 பால் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு, அவற்றில் ஒரு பால் மாதிரியானது பாதுகாப்பற்றதாகவும், ஒரு பால் மாதிரியானது தரமற்றதாகவும் இருந்தன. இக்கருவியின் உதவியுடன், தமிழகத்தில் தற்போது பல்வேறு இடங்களில் தொடர்ந்து பால் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், பால் வளத் துறையால் 31–5–2017 வரை சென்னை மண்டலத்தில் பால் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மாதவரம் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அலுவலகத்தில் அமைந்துள்ள தரக்கட்டுப்பாடு ஆய்வகத்திற்கும், 5 மாதிரிகள், கிண்டி ஆய்வகத்திற்கும் மற்றும் 4 மாதிரிகள் மைசூர் மத்திய அரசு ஆய்வகத்திற்கும், 4 மாதிரிகள், புனே மத்திய அரசு ஆய்வகத்திற்கும் இதர மாவட்ட பகுதிகளிலிருந்து 39 மாதிரிகள் எடுக்கப்பட்டு, அம்மாதிரிகள் அருகிலுள்ள உணவுப் பாதுகாப்பு ஆய்வகங்களுக்கும் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மற்றொரு வழக்கில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின்படி, ஏற்கெனவே அமைக்கப்பட்ட மாநில மற்றும் மாவட்ட அளவிலான

2017 ஜூன் 22]

குழுக்கள் 15–6–2017 அன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் 14 உயர் அலுவலர்களைக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 10 அலுவலர்களைக் கொண்டும் கண்காணிப்புக் குழுக்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப்பட்ட குழுவில் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை அரசுச் செயலாளர், பால் வளத் துறை இயக்குநர் மற்றும் மாவட்ட துணைப் பதிவாளர் (பால் வளம்) ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட அளவிலான மேற்சொல்லப்பட்ட குழு மாதந்தோறும் கூடி முடிவெடுக்கும். மாநில அளவிலான குழு, தேவையின் அடிப்படையில் கூடி முடிவெடுக்கும். தவறு செய்யும் நிறுவனங்கள்மீது உரிய சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசு எடுத்த நடவடிக்கை, வழக்கு விவரங்களைப்பற்றியெல்லாம் இங்கே விளக்கமாகப் பேசினார். அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. தனிப்பட்டவர்கள் பாலிலே கலப்படம் செய்கிறார்கள் என்பதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கிறார். அதிலும் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. கலப்படம் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார். அதிலும் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அமைச்சர் சொல்கிறபொழுது, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தால், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய்விடுகிறார்கள், நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறார். நடவடிக்கை எடுத்தால் நீதிமன்றத்திற்குப் போய்த்தான் ஆக வேண்டும். ஆனால், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போனாலும்கூட, இந்தக் கலப்படத்தை தடுத்தே தீருவேன் என்று அவர் சொல்லியிருந்தால், அதைப் பாராட்ட வேண்டும். அதைத்தான் நீங்கள் செய்ய வேண்டும். அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள் என்பதற்காக நாம் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகையினால்,*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினையில் உறுதியாக இருந்து, கலப்படக்காரர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்களா, இல்லையா என்பது முக்கியமல்ல, கலப்படத்தைத் தடுத்தே தீர வேண்டுமென்பதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்க வேண்டும். உறுதியாக இருப்பாரா எனத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். தமிழகத்திலே பால் முதற்கொண்டு, எந்தப் பொருளிலும் கலப்படம் இல்லாத சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குழந்தைகள் பருகக்கூடிய பாலிலே இரசாயனப் பொருள்களோ, சோடியமோ, யூரியாவோ மற்றும்* hydrochloric acid *போன்ற எந்தவிதமான வேதிப் பொருள்கள் இருந்தாலும், அவர்கள்மீது கடும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எங்களை உடன் வைத்துக் கொண்டு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். இது அரசின் நடவடிக்கையில் இருக்கிறது. இதைச் சொன்னால், சொன்ன தகவல் அவர்களுக்குச் சென்று, உடனே அவர்கள் சுதாரித்துக்கொள்கிறார்கள்.*

(முற்பகல் 11—35)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு ஓர் உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். புனேவுக்கு நாங்கள் மாதிரியை அனுப்பினோம். மாதிரியை அங்கே வாங்க மறுத்தார்கள். வாங்க மறுத்தவுடனேயே அங்கு பணிபுரியும் ஓர் அதிகாரி, எங்களுக்கு மாதிரி வரவில்லை என்று மறுநாள் பத்திரிகைக்குப் பேட்டி கொடுக்கிறார். நான் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தொடர்புகொண்டு, விமானம் மூலமாக மாதிரியை அனுப்பிவைத்தேன். மாலை பத்திரிகையில் அந்த அதிகாரி 'எங்களுக்கு மாதிரி வந்துவிட்டது' என்று அறிக்கை கொடுக்கிறார். நாங்கள் இரகசியமாக அதை ஆய்வு செய்யுங்கள் என்று சொன்னால், அதுகுறித்து பத்திரிகைக்கு பேட்டி கொடுக்கிறார் ஓர் அதிகாரி. ஆகவே, எதிலும் நாங்கள் இரகசியம்

2017 ஜூன் 22]

காக்க வேண்டியது அவசியமாகிறது. நீங்கள் சொல்வதுபோல் யாரும் தப்பிவிட முடியாது. நீதிமன்றத்திற்குச் சென்று stay order வாங்கியோ, நீதிமன்றத்தில் அபராதம் கட்டியோ, தப்பிக்கின்ற வேலை இனிமேல் நடக்காது. கலப்படம் செய்கிறவர்கள், அதிலும் பாலில் கலப்படம் செய்கிறவர்கள் எவராக இருந்தாலும் சட்டத்திற்குமுன் அனைவரும் சமம் என்ற அடிப்படையில் தண்டிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கண்டிக்கப்பட மாட்டார்கள், நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

69—

திருக்கோயில் புனரமைப்பு

***16238—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, சின்னமட்டாரபள்ளி ஊராட்சியிலுள்ள அருள்மிகு பஸ்வேஸ்வர சுவாமி திருக்கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியத்தின் மறுபிறப்பு, சாதனையின் உச்சரிப்பு, தமிழும், தமிழ்நாடும் வாழ தன்னையே தியாகம் செய்து, "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று வாழ்ந்து வந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழக முதலமைச்சராகச் சிறப்பாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, எனது பதிலை இந்த மன்றத்தில் பதிவு செய்கிறேன். (குறுக்கீடுகள்)